www.gkiqmaster.com

## பகுதி 3

# கல்விப் பொது அறிவுகள்-2023

1. 2016.04.20 திகதியிடப்பட்ட கட்டாயக் கல்விக் கட்டளை அடங்கிய அதிவிசேட வர்த்தகமானிக்கு அமைய, கட்டாயக் கல்வியின் வயதெல்லை?

   5 வருடம் முதல் 16 வருடம் வரை

2. அண்மையில் அனுஸ்சிட்டிக்கப்பட்ட 75 வது சுதந்திர நாளின் கருப்பொருள் என்ன?

   "நமோ நமோ தாயே நூற்றாண்டின் முதல் படி"

3. இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பு எனப்படுவது?

   யாப்பு

4. கல்வி அமைச்சு அண்மையில் இலங்கை பாடசாலை மாணவர்களிற்கு உளவிழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்றை பாடசாலைகளில் அறிமுகப்படுத்தியது. "உளவிழிப்புணர்வு பாடசாலை"(Mindful School) இன் ஸ்தாபகர் ?

   உடாரியாஹும தர்மஜீவ தேரர்

5. அண்மையில் நாட்டில் உயரிய விருதான "சிறிலங்காமானி" (2023) விருதினைப் பெற்றுக் கொண்ட மூத்த அரசியல்வாதியும் சமூக ஆர்வலரும்?

   கரு ஜெயசூரிய (முன்னாள் சபாநாயகர்)

6. தற்போதைய கல்வி இராஜங்க அமைச்சர்?

கௌரவ.அ.அரவிந்த குமார் (பா.உ)

7. தற்போதைய உயர் கல்வி இராஜங்க அமைச்சர்?

கலாநிதி சுரேன் ராகவன் (பா.உ)

8. யுனிசெவ் ஆய்வறிக்கைகளின் படி, கொவிட் காலப்பகுதியில் நிகழ்நிலை கற்றலில் அதிக சிரமங்களை எதிர்கொண்ட மாணவர்கள் எந்த மாகாணத்திற்குரியவர்கள்?

ஊவா மாகாணம்

9. இலங்கையில் அண்மையில் கொண்டாடப்பட்ட சுதந்திர தினமானது எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

பவளவிழா

10. கல்வி அமைச்சின் அண்மைய புள்ளிவிபர தரவுகளிற்கு அமைய பொதுவாக, எந்தப் பாடங்களிற்கு அதிக ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது?

கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம்

11. 37/2022 சுற்றறிக்கையின் படி, சனாதிபதி நிதியத்தின் ஊடாக க.பொ.த உயர்தர துறையில் கல்வி கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் இருந்து வரும் கற்றல் திறமைகூடிய மாணவர்களிற்கு புலமைப் பரிசல் வழங்கப்படுகின்றது. மாதாந்தம் வழங்கப்படும் தொகையும் காலமும்?

ரூ 5000 (24 மாதங்கள்)

12. அண்மையில் பொது நிர்வாக அமைச்சினால், வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய, அரச ஊழியர்களுக்கான ஓய்வுக்கால வயது?

60

13. கடந்த வருட இறுதியாண்டில் வெளியிடப்பட்ட ஒய்வு வயதெல்லை தொடர்பான சுற்றுநிருபணங்களின் படி, பல துறைகளின் அரச ஊழியர்களும் ஒய்வு பெற்றுச் சென்றனர். கல்வி அமைச்சின் தரவுகளின் படி, எத்தனை ஆசிரியர்கள் ஒய்வு பெற்றுச் சென்றுள்ளனர்?

12000

14. 2023 ம் ஆண்டுக்குரிய பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடை விநியோகத்திற்கு உதவி செய்த நாடு?

சீனா

15. 2014 ம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய, ஆசிரியத் தொழிலுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு கொண்டிருக்க வேண்டிய அதிகபட்ச வயது?

35

16. தற்போது நிகழ்ந்துள்ள மாற்றங்களிற்கு அமைய, ஆசிரியர் தொழிலுக்கு விண்ணப்பிப்பதற்கான வயதெல்லை?

18 — 40

17. அண்மைய தரவுகளின்கு அமைய, தேசிய பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்கள் எண்ணிக்கை?

4000

R.Eeswaran (EGK)
www.gkiqmaster.com

**18.** கல்வித் திணைக்களம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட வருடம்?

1920

**19.** பட்டதாரி ஆசிரியர் எனப்படுவர்?

கல்வி விடயத்திற்கு பொறுப்பான நிரல் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத் தகமைகளோடு ஆசிரியர் நியமங்களுக்காக நியமிக்கப்படுபவர்

**20.** ஆசிரியர் சேவைப் பிரமாண குறிப்பின்படி, பட்டதாரிகள் ஆசிரிய சேவையின் எத்தரத்திற்கு உரியவர்கள்?

3 வகுப்பு - I (அ) தரம்

**21.** டிப்ளோமாதாரர்கள் எனக் கருதப்படுவது?

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கக்கூடிய இரு ஆண்டுகளை விட குறையாத பாடநெறி கால எல்லையை கொண்டதும் தேசிய தொழில் சார் தகைமை மட்டம் ஆறு (6) விடக் குறையாத டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்.

**22.** புதிய கல்விச் சீர்திருத்தத்தின் ஊடாக கல்வி அமைச்சு அதிகரிக்க எதிர்பார்த்துள்ள வலயக் கல்வி பணிமணைகளின் எண்ணிக்கை?

120

**23.** முன்பிள்ளைப் பருவம் என்பதற்கான வயதெல்லை?

0 - 5 வயது (சர்வதேச வரையறை 0 -8)

R.Eeswaran (EGK)

**24.** "சாதி, மதம், இனம், மொழி, நிறம் என்ற பேதங்கள் இன்றி பொதுவான பாடசாலை முறைமைக்குள் சம வயதினைக் கொண்ட பிள்ளைகளுடன் கல்வியை வழங்க வேண்டும்" என்ற யுனொஸ்கோவின் **"சலமன்கா"** பிரகடத்தை இலங்கை அரசும் ஒப்புதல் அளித்தது. இந்த பிரகடனம் வெளியிடப்பட்ட வருடம்?

1994

**25.** 2030 ஆண்டாகும் போது, சகலருக்கும் தரமான பொது கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் வாழ்நாள் முழுவதும் கல்வி வாய்ப்புக்களை வழங்கள் என்பதை வலியுறுத்தும் யுனெஸ்கோவின் பிரகடம்?

இன்சியோன் பிரகடனம் (2015)

**26.** ஆசிரியர்களின் திறன் மேம்பாடு, பாடசாலை பாடத்திட்டங்களை வடிவமைத்தல் மற்றும் மேம்படுத்தல் ஆகிய பணிகளை நிறைவேற்றும் அமைப்பு?

தேசிய கல்வி நிறுவகம்

**27.** ஆசிரியர் கல்விக்கு /கல்வியல் கல்லூரிகளிற்கு பொறுப்பாக உள்ளவரின் பதவிப் பெயர்?

பிரதம ஆணையாளர்

**28.** 2020 புள்ளிவிபரத் தரவுகளின் படி, வருடாந்தம் தரம் 1 இற்கு அனுமதி பெறும் மாணவர்களின் அண்ணளவான தொகை?

302000

www.gkiqmaster.com

29. “நித்தமும் காப்போம் - நாட்டின் குழந்தைகளை” என்னும் தலைப்பில் செயற்பட்டுவரும் சுரக்சா மாணவர் காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட வருடம்?

2017

30. பொதுநலவாய அமைப்பின் தற்போதைய செயலாளர் நாயகம் ?

பெட்ரீசியா ஸ்காட்லாண்ட்

31. ஆசிய அபிவிருத்தி வங்கியின் 55 வருடாந்த மாநாடு நடைபெற்ற இடம்?

பிலிப்பைன்ஸ், மணிலா

32. எதிர்கால சவால்களை வெற்றி கொள்வதற்குத் தேவையான திறமைகளுடன் கூடிய படைப்பாற்றல் மிக்க சமுதாயத்தினை உருவாக்கும் பொருட்டு, பாடசாலை மாணவர்களின திறமையை விருத்தி செய்வதை நோக்கமாக கொண்டு வழங்கப்படும் புலமைப் பரிசில் திட்டம்?

சுபக புலமைப் பரிசில் திட்டம்

33. தொழில்நுட்ப பிரிவில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களின் திறமையை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும் புலமைப் பரிசில் திட்டம்?

சுஜாதா தியனி புலமைப் பரிசுத் திட்டம்

34. வருடாந்தம் தரம் 5 புலமைப் பரிலுக்கு தகுதி பெறும் மாணவர்களின் அண்ணளவான எண்ணிக்கை?

135000 (2021)

R.Eeswaran (EGK)

**35.** "எனது அறியாமையை அறிந்து கொள்வதற்கான ஞானம் எனக்கு உண்டு" எனக் கூறிய சிந்தனையாளர்?

சோக்கிரடீஸ்

**36.** "சமூகத்தில் மாறிவரும் தேவைகளைக் கருத்திற் கொண்ட வகையிலான கல்விமுறைகளை உருவாக்குவதற்கு ஏற்ற தேசிய கல்விக் கொள்கையை விருத்தி செய்து வளமான இலங்கையை பரிணமிக்க செய்தல்" என்ற பணிக்கூற்றினைக் கொண்டுள்ள அமைப்பு?

தேசிய கல்வி ஆணைக்குழு

**37.** கல்வி அமைச்சின் நோக்க கூற்று என்ன?

"மாற்றம் அடைந்து வரும் உலகமயமாக்கப்பட்ட அறிவுசார்ந்த பொருளாதாரத்தின் சவால்களை எதிர்கொள்ளும் திறன்களைக் கொண்ட இலங்கை பிரசைகளின் எதிர்கால சந்ததியினரை உருவாக்கல்"

**38.** கன்னங்கர அறிக்கை வெளிவந்த ஆண்டு?

1943

**39.** தேசிய கல்வி ஆணைக்குழுவில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை?

15 உறுப்பினர்கள்

(கல்வி, நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தில் திறமையான 10 உறுப்பினர்கள் உள்ளடங்களாக, மேலும், 5 உறுப்பினர்கள் சனாதிபதி நியமிப்பதோடு, தலைவர், உப தலைவரையும் உள்ளடக்கி 17 பேரைக் கொண்டது)



R.Eeswaran (EGK)

**40.** 2020 ம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழுவின் முன்மொழிவுகளின் படி, ஒரு பாடசாலை அதிகபட்சம் கொண்டிருக்க வேண்டிய மாணவர் தொகை?

1500.

**41.** இலங்கையில் தொழில்நுட்ப மற்றும் தொலைக்கல்வி பயிற்சித்துறையின் ஒருங்கிணைந்த தரப்படுத்தல் முறையாக, தேசிய தொழில்தகமைச் (ஏேஞ) சட்டகம் நிறுவப்பட்ட வருடம்

2004

**42.** எந்த வருடம் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 11 வரையிலான மாணவர்களிற்கு தொழில்நுட்ப பாடநெறிகள் அறிமுகம் செய்யப்பட்டது?

2007

**43.** தரம் 6 தொடக்கம் 11 கற்பிக்கப்படும் தொழில்நுட்ப பாடநெறிகளின் எண்ணிக்கை?

ஒன்பது (9)

**44.** செயல்முறை மற்றும் தொழில்நுட்ப திறன்கள் (PTS) எத்தரத்தில் இருந்து கற்பிக்கப்பட்டு வருகின்றது?

தரம் 6 தொடக்கம் 9 வரை

**45.** உயர்தரத்தில் தொழில்நுட்ப துறை அறிமுகப்படுத்தப்பட்ட வருடம்?

2013

**46.** பல்கலைக்கழக கல்லூரிகள்/தொழில்நுட்ப கல்லூரிகளில் பட்டப்படிப்பினை வெற்றிகரமாக நிறைவு செய்யும் மாணவர்களிற்கு வழங்கப்படும் பட்டப்படிப்புச் சான்றிதழ் ?

NVQ மட்டம் 7

R.Eeswaran (EGK)

**47.** இலங்கையில் தொழில்பயிற்சி பாடநெறிகளைப் போதிக்கும் தொழில் பயிற்சி நிறுவனங்கள் எத்தனை உண்டு?

9 (2017)

**48.** கல்வி ஆணைக்குழுவின் முன்மொழிவுக்கு அமைய, பாடசாலை வகுப்பறை கொண்டிருக்க வேண்டிய அதிகபட்ச அளவுத்திட்டம்?

30*30

**49.** பதின்மூன்று (13) வருடகால உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட வருடம்?

2017

**50.** இலங்கையில் கண்பார்வை அற்றோருக்காக பாடசாலைகள் எத்தனை உண்டு?

10 (2017)

**51.** கல்வி அமைச்சு விசேட கல்வி தொடர்பான கல்வி கிளை நிறுவுவதற்கு அடிப்படையாக அமைந்த அறிக்கை?

பேராசிரியர் அரம்பத் அவர்களின் விசேட கல்வி தொடர்பான அறிக்கை

**52.** கல்வி அமைச்சின் விசேட கல்விக் கிளை ஆரம்பிக்கப்பட்ட வருடம்?

1971

**53.** கண்பார்வை அற்ற சிறார்களின் கல்விக்காக ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பாடசாலை அமைந்துள்ள இடம்?

இரத்மலானை கண்பார்வையற்றோர் பாடசாலை (இரத்மலானை) (1910)

R. Eeswaran (EGK)

**54.** இலங்கையில் காணப்படும் செவிப்புலனற்றோருக்கான பாடசாலைகளின் எண்ணிக்கை?

25 (2017)

**55.** இலங்கையில் மிகவும் பழைமையானதும் முன்னணிப் செவிப்புலனற்றோர் பாடசாலையாகவும் உள்ள பாடசாலை?

இரத்மலானை செவிப்புலனற்றோர் பாடசாலை

**56.** விசேட தேவையுடையோர் கல்விக்கான ஆசிரிய — மாணவ வீதம்?

1:3

**57.** அரச பல்கலைக்கழகம் ஒன்றில், 3 ஆண்டுகளை விட குறையாத தாபன ஆசிரியர் பயிற்சிப் பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சான்றிதல் பெற்றவர் அழைக்கப்படுவது?

ஆசிரிய பயிற்சியாளர்

**58.** ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பிற்கு அமைய, தரம் 12 மற்றும் 13 ஆகியன தொடர்பான கற்பித்தலுக்கு தகுதிபெற்றவர்கள்?

பல்கலைக்கழக பட்டதாரி ஆசிரியர்கள்

**59.** ஆசிரியர் சேவையிலுள்ள மொத்த ஆசிரியர்களில் பெண் ஆசிரியர்களின் வீதம் அண்ணளவாக?

75%

**60.** இலங்கையின் கல்வி அபிவிருத்திக்கு உதவி வழங்கும் அமைப்பு?

உலக வங்கி

**61.** தேசிய கல்வி நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்ட ஆண்டு?

1986

R.Eeswaran (EGK)

62. கல்விச் செயலாளர் எனக் கருதப்படுபவர்?

கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சின் அதிகாரி

63. கல்வியியல் பட்டதாரிகளின் ஆசிரிய சேவைத் தரம் ஆனது?

2 வகுப்பு – II

64. கல்வி புத்தகங்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், அறிக்கைகள், சட்டங்கள் மற்றும் எனைய கல்வி பற்றிய ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படும் இடம்?

தேசிய நூலக ஆவண மைய நிலையம்

65. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கு எந்த வருடம் ஸ்தாபிக்கப்பட்டது?

1979 (16 இலக்க)

66. தேசிய பாடசாலைகளை நிர்வகிப்பவர் ?

தேசிய பாடசாலைகள் பணிப்பாளர்.∴கல்விப் பணிப்பாளர்

67. பன்னாட்டு கல்வி தினம் கடைப்பிடிக்கப்படுவது ?

ஜனவரி 23

68. இலங்கையின் கல்வித் துறையின் வளர்ச்சிக்கு உதவி செய்யும் பன்னாட்டு நிறுவனம்?

யுனெஸ்கோ

69. பொதுக் கல்வி சீர்திருத்தம் கொண்டுவரப்பட்ட வருடம்?

1997

R.Eeswaran (EGK)

70. பிரமாணக் குறிப்புக்கு அமைய, கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் உத்தியோகபூர்வ பெயர்?

நிரல் கல்வி அமைச்சு

71. கல்விமானி பட்டதாரி எனப்படுபவர்?

பல்கலைக்கழக மானியங்கள் அணைக்குழுவினால் ∴ அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கல்விமானி தகமைப் பட்டம் கொண்டவர்.

72. ஆசிரிய பயிற்சியாளர் என்பவர்?

கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட 2 வருடங்களை விட குறையாத தாபன ஆசிரியர் பயிற்சிப் பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சான்றிதல் பெற்றவர்.

73. இலங்கையில் முதலாவது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட வருடம்?

1903

74. பாடசாலைகளில் எத்தரம் வரையான மாணவர்களை உள்ளீர்த்துக் கொள்வதற்கான புதிய நடைமுறை ஒன்றை கல்வி அமைச்சு அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளது?

2 தொடக்கம் 11 (6 தவிர்ந்த)

75. இலங்கையில் கல்வி நவீனமயமாக்கப்பட்ட வருடம்?

1980

R.Eeswaran (EGK)

**76.** 2019 ம் ஆண்டு ஏவப்பட்ட இலங்கையின் முதலாவது ஆராட்சி செய்மதியின் பெயர் ?

ராவணா 1

**77.** பாடசாலைகளில் பாடவிதான இணைச் செயற்பாடுகளை பாடசாலை மட்டத்தில் நிறைவேறும் பணியினை கொண்டவர்?

ஆசிரியர்

**78.** போதனாவியல் டிப்ளோமாதாரர்களினைத் தவிர, ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ளும் சகலருக்கும் குறைந்தபட்சம் எத்தனை நாட்களுக்கு ஆரம்ப பயிற்சி வழங்கப்படுகின்றது?

21

**79.** முன்பள்ளி கல்வி என்பது பொதுவாக எந்த வயது பிரிவுக்குள் உள்ளடங்கும்?

3 – 5

**80.** தரம் ஒன்றிற்கு மாணவர்களை இணைப்புச் செய்யும் போது, கூடிய கவனம் செலுத்தப்படும் விடயம்?

பாடசாலைக்கும் வதிவிடத்திற்கும் இடையில் உள்ள தூரம் (ஆகக்கூடியது 2km)

**81.** 2020 ம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய மையப்படுத்தப்பட்ட பாடசாலை என்பது?

1 – 13 அல்லது 6 – 13 வரையான தரங்களைக் கொண்ட பாடசாலை

R.Eeswaran (EGK)

**82.** பாடசாலையில் 1 – 5 வரையான ஒரு வகுப்பில் இருக்க கூடிய அதிகபட்ச மாணவர்களின் எண்ணிக்கை?

40

**83.** பாடசாலை ஒன்றில் 6 – 11 வரையான ஒரு வகுப்பில் இருக்க கூடிய அதிகபட்ச மாணவர்களின் தொகை?

45

**84.** முன்பிள்ளைப் பராமரிப்பு மற்றும் விருத்தி மீதான இலங்கையின் தேசிய கொள்கையின் வரைவிலக்கணத்தின் படி, முன்பிள்ளை பருவம் என்பது?

0-5 வயது வரையான காலம் வரை

**85.** 2017 தேசிய புள்ளிவிபர தொகை மதிப்பின்படி, இலங்கையில் உள்ள முன்பள்ளிகளின் எண்ணிக்கை?

19668 (2019)

**86.** இலங்கையில் கல்வி பீடங்கள் உள்ள பல்கலைக்கழகங்கள்?

கொழும்பு, யாழ்ப்பாண, பெரதேனனியா மற்றும் திறந்த பல்கலைக்கழகம்

**87.** பிள்ளை மற்றும் இளவயது கட்டளைச் சட்டமானது, இலங்கையில் எத்தனை வயதிற்கு கீழ்பட்டவர்களை பிள்ளை என வரையறுக்கின்றது?

18

**88.** "அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் அவர்களின் சமூக – பொருளாதார நிலைமையைக் கருதாமல் சமமான கல்வியை வழங்க வேண்டும்" எனக் குறிப்பிட்டவர்?

கன்னங்கரா

R.Eeswaran (EGK)

**89.** நவீன கல்வித்துவத்தின் தந்தை ?

ஜோன் டுயி

**90.** கல்வி பற்றி உலகப் பிரகடனம் வெளிவந்த ஆண்டு?

2000

**91.** இலங்கையில் 1997 ம் ஆண்டு கட்டாயக் கல்விச் சட்டத்தின் படி, கட்டாய கல்வி வயது எல்லை?

5 தொடக்கம் 14

**92.** தேசிய விளையாட்டு நாளாகப் பிரகடப்படுத்தப்பட்ட நாள்?

யூலை 31

**93.** அண்மையில்(2023) மகளீர் கிரிக்கெட் அணியின் ஆலோசகராக நியமிக்கப்பட்ட பிரபல ஓட்ட வீராங்கனை?

சுசந்திக்கா ஜயசிங்க

**94.** தொழில் கல்வி ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்ட வருடம்?

1991

**95.** குழந்தைகள் மேம்பாடு மற்றும் பெண்கள் விவகார அமைச்சு உருவாக்கப்பட்ட வருடம்?

2005

**96.** தன்னுடைய கல்வி திட்டத்தில் நல்லொழுக்க கல்வியை முதன்மைப்படுத்தி சிந்தனையாளர்?

சோக்கிரடீஸ்

**97.** இரு நாடுகளுக்கான தேசிய கீதத்தினை இயற்றியவர் என்ற பெரிமைக்குரியவர்?

இரவீந்திரநாத் தாகூர்

R.Eeswaran (EGK)

98. "எதையுமே கற்பிக்க முடியாது" என்ற நிலைபாட்டினை முன்வைத்தவர்?

அரவிந்தர்

99. பிள்ளைகளுக்கு வழங்கப்படும் கல்வியானது மன ஒருமைப்பாட்மையும் மன வளர்ச்சியையும் வழங்குவதாக இருக்க வேண்டும் எனக் கூறிய சிந்தனையாளர்?

ரூசோ

100. மக்களாட்சி கல்விக கோட்பாட்டினை முன்வைத்தவர்?

ஜோன் டுயி

www.gkiqmaster.com

R.Eeswaran (EGK)